<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | : | 8/2024 | சாட்சியம் | : | **MW1** |
| **Name** | : | Thiru.Sridharan | | | |
| **Date** | : | **02.03.2026** | | | |
| **Time** | : | **10.58 a.m to 11.21 a.m** | | | |

<u>நி.த.சா.**1.Thiru.Sridharan** என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

குற்றச்சாட்டு குறிப்பாணையில் மனுதாரருக்கு எதிராக எந்த தேதியில் புகார் அளிக்கப்பட்டது என்ற விவரம் சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். நி.சா.ஆ.**1** முதல் **4** வரை உள்ள ஆவணங்களில் ஒரே நபரின் கையெழுத்து உள்ளது என்றால் இல்லை. எந்த தேதியில் மேற்படி ஆவணங்கள் பெறப்பட்டன என்ற குறிப்பு கண்டுள்ளதா என்றால் இல்லை. நி.சா.ஆ.**15** ரசீதுகள் உள் விசாரணையின் போது மனுதாரருக்கு கொடுக்கப்படவில்லை என்றால் ஆமாம். நி.சா.ஆ.**18** விசாரணை அறிக்கையில் நிர்வாக தரப்பில் 1 முதல் 58 வரை உள்ள ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் ஆமாம். அந்த ஆவணங்கள் சாட்சிகள் மூலமாக குறியீடு செய்யப்படவில்லை என்றால் இல்லை. மேற்படி ஆவணங்கள் விசாரணை அதிகாரியால் தன்னிச்சையாக குறியீடு

செய்யப்பட்டிருக்கின்றன என்றால் இல்லை. நி.சா.ஆ.**16** விசாரணை நடவடிக்கையில் விசாரணை எவ்வாறு நடைபெற உள்ளது போன்ற விவரங்கள் மனுதாரருக்கு விளக்கி கூறப்படவில்லை என்றால் தவறு. விளக்கி கூறப்பட்டதாக அந்த ஆவணத்தில் கண்டுள்ளதா என்றால் இல்லை. நி.சா.ஆ.**1** புகார் மற்றும் காரணம் கேட்கும் அறிவிப்பில் சம்பவம் எங்கு நடைபெற்றது என்ற விவரம் சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். நிர்வாக தரப்பில் 1 முதல் 58 வரை உள்ள ஆவணங்கள் குற்றச்சாட்டு குறிப்பாணையுடன் இணைத்து கொடுக்கப்படவில்லை என்றால் ஆமாம். புகார் மற்றும் காரணம் கேட்கும் அறிவிப்பில் நிர்வாகத்தின் பெயரை பயன்படுத்தியதாக சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். மனுதாரர் நிர்வாகத்தின் பெயரை பயன்படுத்தாத காரணத்தினாலும் நிர்வாகத்திற்கு எந்தவித நஷ்டமும் ஏற்படுத்தாத காரணத்தினாலும் அவருக்கு எதிராக உள்துறை விசாரணை நடத்துவதற்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நி.சா.ஆ.**16** உள்துறை விசாரணை நடவடிக்கை குறிப்பு நகல் மனுதாரருக்கு வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் வழங்கப்பட்டது என்றால் விசாரணை நடைபெற்ற அந்தந்த தேதியில் வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்டது என்பதற்கான குறிப்பு நடவடிக்கையில் காணப்படுகிறது என்றால் இல்லை. மனுதாரருக்கு அதன் நகல் வழங்கப்படாத காரணத்தினால் அதற்கான குறிப்பு இல்லை என்றால்

தவறு. உள்துறை விசாரணையின் போது நிர்வாக பிரதிநிதியாக நான் தான் சாட்சியாக விசாரிக்கப்பட்டேன். உள்துறை விசாரணையின் போது நான் புகாரியில் உள்ள சங்கதிகள் இல்லாமல் வேறு சங்கதிகளை குறித்து சாட்சி அளித்திருப்பதை வைத்து விசாரணை அதிகாரி முடிவிற்கு வந்தது தவறு என்றால் சரியல்ல. நி.சா.ஆ.**11** மற்றும் **14** ஆவணங்கள் மனுதாரர் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டால் மீண்டும் வேலை வழங்கப்படும் என நிர்பந்தித்ததால் கொடுக்கப்பட்டவை என்றால் தவறு. உள்துறை விசாரணையின் போது மனுதாரருக்கு நிர்வாக தரப்பு ஆவணங்களின் நகல்கள் மற்றும் விசாரணை நடவடிக்கை நகல்கள் வழங்கப்படாத காரணத்தினால் அவருக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்படாமல் நடத்தப்பட்ட உள்விசாரணை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.
Sd/-.S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:02.03.2026.